**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

-------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அலுவலகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அலுவலகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அலுவலகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினம் ரூபா 2,924,950 தொகை மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய மானிய பெறுவனவுகள் அலுவலகத்தின் வருமானமாக இனங்காணப்படாமல் ஒதுக்கங்களில் | இந்த தவறு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மானிய பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்க்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் அலுவலகத்தின் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் 03 செலவின விடயங்களுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 1,436,320 பெறுமதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலுத்த வேண்டிய பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | காணமல் போன ஆட்கள் பற்றிய சர்வதேச தினத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 2,505,909 தொகையான விழாச் செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சர்வதேச தினத்திற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சகல செலவினங்களும் மூலதன நிதி ஏற்பாட்டின் கீழ் கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொதுத் திறைசேரியினால் மூலதன நிதி ஏற்பாடாக உரிய பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகையும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | எதிர்வரும் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 200,000 தொகையான கட்டிட வாடகைச் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமான கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | உரிய தவறை 2020 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 2,450,000 தொகையான கட்டிட வாடகைச் செலவினம் ஏனைய சேவைச் செலவினத்தின் கீழ் நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய தவறை 2020 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,845,457 பெறுமதியான கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் எங்கள் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தெடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது திறைசேரியில் இருந்து மூலதன மானியமாக கிடைத்த ரூபா 2,935,713 தொகை வருமான செலவினமாக செலவிடப்பட்டு அந்த மானிய பெறுவனவுகள் அலுவலகத்தின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியில் இருந்து மீண்டெழும் செலவினங்களுக்கு கிடைத்த நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக செலவிடுவதற்கு ஏற்பட்ட ரூபா 2,935,713 தொகை நிதி அமைச்சின் அறிவுறுத்தலின் அடிப்படையில் எங்களுக்கு மூலதன மானியமாக கிடைத்த பணம் பயன்படுத்தப்பட்டு செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த தொகை மீண்டெழும் செலவிமாக கிடைத்த நிதியமாக கருதி 2019 இன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | திறைசேரியில் இருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 நவம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) ஆம் பந்தி | அமைச்சிற்கு சொந்தமான வாகனமொன்று சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக கையேற்கப்படாமல் பாவனைக்கு எடுக்கப்பட்டிந்ததுடன் வாகன பராமரிப்பு செலவினம் மற்றும் எரிபொருளுக்காக முறையே ரூபா 252,087 தொகை மற்றும் ரூபா 328,802 தொகை என்பன செலவிடப்பட்டிருந்தன. | அமைச்சின் மூலம் தற்காலிக அடிப்படையில் ஒரு வாகனம் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தின் பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவினமாக இந்த செலவினம் செலவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் அந்த வாகனத்தை எங்களுக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,445,221 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,076,345 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,368,876 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நபர்களின் செலவினம், பிரயாணச் செலவினம், வழங்கல் மற்றும் நுகர்வோர் செலவினம் மற்றும் சேவைச் செலவினம் என்பன அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 39 பதவிகளில் 30 உம், மூன்றாம் நிலை மட்ட பதவிகள் 114 இல் 99 உம் வெற்றிடமாக காணப்பட்டமை நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆட்சேர்க்கும் முறைமையில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் சில பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட சம்பளங்களின் பிரகாரம் பொருத்தமான நபர்களை ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்ததுடன் அவ்வாறே இந்த நிலைமையில் நாட்டில் நடைபெற்ற தேர்தலின் காரணமாக புதிய ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டிருந்தமையினாலும் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் தேவைகளுக்காக உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் இந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் | 2019 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிதி ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நிதி ரீதியான செலவினங்களை செய்யாதிருந்த போதிலும் எங்களால் 2019 ஆம் ஆண்டின் போது | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சகல பணிகளையும் உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட |

போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் II பகுதியின் 10(1) இல் காண்பிக்கப்படுகின்ற பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குரிய பணிகள் எதுவும் இந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

செய்வதற்கு திட்டமிடப்பட்ட பணிகள் 2018 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

வேண்டும்.